05.02.2026

IDOP.No.215/2024

**ம.சா.2 – வின்செட் சேவியர்**

**<u>எதிர்மனுதாரர் தரப்பு குறுக்குவிசாரணை :–</u>**

எனக்கு திருமணமாகிவிட்டது. என் மனைவி பெயர் பவுன். எனக்கும் என் மனைவிக்கும் விவாகரத்து ஆகிவிட்டது. என் மனைவிக்கு வேறு திருமணம் ஆகிவிட்டது. நான் திருமணம் செய்துகொள்ளவில்லை. மனுதாரர் எனக்கு உறவினர் இல்லை. மனுதாரரை எனக்கு பத்து ஆண்டுகளுக்கு மேலாக தெரியும். எதிர்மனுதாரரை அவருடைய திருமணத்திற்கு பின்னிட்டுதான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். மனுதாரர் வெளிநாட்டில் வேலை செய்து வந்ததால், எதிர்மனுதாரர் தனியாக வீட்டில் வசித்து வந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். தனியாக இருந்த எதிர்மனுதாரரிடம் நான் தவறாக நடக்க முயற்சி செய்ததாகவும், அதை எதிர்மனுதாரர் கண்டித்தார் என்றாலும் சரியல்ல. அதனால் எனக்கும் எதிர்மனுதாரருக்கும் முன்விரோதம் இருக்கிறது என்றால் சரியல்ல. அதனால்தான் நான் எதிர்மனுதாரர் தவறான நடத்தைக் கொண்டவர் என்று பொய்யாக சொல்லி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை :</u>** இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

CHRISTOPHER M

Digitally signed by CHRISTOPHER M
Date: 2026.02.05 17:54:31 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.